**பெண் :** யமுனை ஆற்றிலே
ஈர காற்றிலே
கண்ணனோடு தான் ஆட..
பார்வை பூத்திட
பாதை பார்த்திட
பாவை ராதையோ வாட

**குழு :** யமுனை ஆற்றிலே
ஈர காற்றிலே
கண்ணனோடு தான் ஆட..
பார்வை பூத்திட
பாதை பார்த்திட
பாவை ராதையோ வாட

**பெண் :** இரவும் போனது
பகலும் போனது
மன்னன் இல்லையே கூட..
இளைய கன்னியின்
இமைத்திடாத கண்
இங்கும் அங்குமே தேட....

**குழு :** இரவும் போனது
பகலும் போனது
மன்னன் இல்லையே கூட..
இளைய கன்னியின்
இமைத்திடாத கண்
இங்கும் அங்குமே தேட....

**பெண் :** {ஆயர்பாடியில்
கண்ணன் இல்லையோ..ஓ..

ஆசை வைப்பதே
அன்பு தொல்லையோ…} (2)
பாவம் ராதா…

**குழு :** யமுனை ஆற்றிலே
ஈர காற்றிலே
கண்ணனோடுதான் ஆட…
**பெண் :** பார்வை பூத்திட
பாதை பார்த்திட
பாவை ராதையோ வாட